# தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
# 08.06.2016 முதல் 12.06.2016)

**அறிக்கைஎண் :046/2016** **தேதி:07.06.2016**

## மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 30°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் பரவலான மழை பெறப்பட்டது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை:ஈரோடு (08.06.2016 முதல் 12.06.2016)

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் 5 நாட்களுக்கு பரவலாக மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34° செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25° செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 18 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 08.06.16 | 12 | 34 | 25 | 6 | 75 | 65 | 18 | தெற்கு |
| 09.06.16 | 12 | 34 | 25 | 6 | 75 | 65 | 18 | தெற்கு |
| 10.06.16 | 4 | 34 | 25 | 6 | 75 | 65 | 18 | தெற்கு |
| 11.06.16 | 5 | 34 | 25 | 6 | 75 | 65 | 18 | தெற்கு |
| 12.06.16 | 4 | 34 | 25 | 6 | 75 | 65 | 18 | தெற்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ எதிர்பார்க்கப்படும் மழை மற்றும் அதிக காற்றிலிருந்து பாதுகாக்க 5 மாதங்களுக்கு மேலான வாழைக்கு முட்டுக் கொடுக்கவும், முன்பட்ட கரும்பிற்கு விட்டம் கட்டவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினால் தற்போது நடப்பட்ட மஞ்சள் கிழங்குகள் அழுகிவிடாமல் தவிர்க்க போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து இறவை பயிர்களுக்கும் தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

- ✓ தென்மேற்கு பருவமழை துவங்கவுள்ளது. எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி சிறுகுறு தானியங்களை மேற்கு மழைத்தொடர்ச்சி அடிவாரங்களில் விதைக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி பொள்ளாச்சி பகுதிகளில் 40 நாட்களான கடலையில் ஜிப்சம் ஏக்கருக்கு 200 கிலோ இட்டு மண் அணைக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் காற்றின் அதிக ஈரப்பதத்தின் காரணமாக பால் மாடுகளில் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும் மடுவினை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு கழுவி மடுவீக்க நோய் வராமல் தவிற்கவும்.

## குறுஞ்செய்தி

- ✓ தென்மேற்கு பருவமழை துவங்கவுள்ளது. எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி சிறுகுறு தானியங்களை மேற்கு மழைத்தொடர்ச்சி அடிவாரங்களில் விதைக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.